# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.**DEGREE EXAMINATION –**TAMIL LITERATURE**

FIFTH SEMESTER – **APRIL 2018**

**TL 5502– SANGAM LITERATURE**

Date: 27-04-2018 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00-12:00

**பகுதி - அ (10 x2 = 20 மதிப்பெண்கள்)**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. 'அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி' - எனக் குறுந்தொகைத் தலைவி கூறக் காரணமென்ன?
02. ''மாரி ஆம்பல் அன்ன கொக்கின்'' - விளக்கம் தருக.
03. 'பொருநருமுளரோ நீ களம் புகின்', என ஔவை கூறும் காரணம் யாது?
04. விறலியாற்றுப்படைத் துறை - பொருள் கூறுக.
05. கலித்தொகையின் சிறப்புயல்புகளுள் இரண்டினைக் குறிப்பிடுக.
06. காமம் மிக்க கழிபடர் கிளவி என்றால் என்ன?
07. ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்தைப் பாடியோன், பாடப்பட்டோன் யார்?
08. குறிஞ்சிப்பாட்டின் ஒழுக்கம் யாது?
09. அகநானூற்றின் வேறுபெயர்களைக் கூறுக.
10. அகநானூற்றைத் தொகுத்தவர், தொகுப்பித்தோன் யாவர்?

**பகுதி - ஆ (5 x7 = 35 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. அள்ளூர் நன்முல்லையார் பாடற்கருத்தை குறுந்தொகை வழி விளக்குக.
12. அதியமான் பொகுட்டெழினியின் பகை இரண்டினைக் குறிப்பிட்டு எழுதுக.
13. தலைவனுக்கு ஆலோசனைக் கூறும் தோழியின் மதிநுட்பத்தை நெய்தற்கலி வழி விளக்குக.
14. அன்னையிடம், 'சாந்த நெகிழிகாட்டி' தோழி கூறியவற்றை நற்றிணைப் பாடல் வழிப்புலப்படுத்துக.
15. ஐங்குறுநூற்றுத் தலைவியின் வேண்டுதலை 'வேட்கைப்பத்து' எவ்வாறு உணர்த்துகிறது?
16. குறிஞ்சிப்பாட்டில் இடம்பெறும் மலர்களின் பெயர்களைத் தொகுத்துக் கூறுக.
17. அகநானூற்றுப் பாடலின் மருதநிலக் கருத்துகளை விளக்கி எழுதுக.

**பகுதி - இ (3 x15 = 45 மதிப்பெண்கள்)**

**மூன்றுபக்க அளவில் விடையளிக்க.**

18. குறுந்தொகைப் பாடல்களில் தலைமகள் கூற்றாக வரும் பாடற் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

**( அல்லது )**

வேள்பாரியின் வீரம் மற்றும் கொடைச்சிறப்பினை புறநானூறு வழி தொகுத்தெழுதுக.

19. தலைவியின் பின்சென்ற செவிலித்தாய்க்கு, அந்தணர் கூறிய அறங்களை, பாலைக்கலி வழி நிறுவுக.

**( அல்லது )**

தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியவற்றை நற்றிணைப் பாடல்கள் வழி விளக்கி வரைக.

20. ஐங்குறுநூற்றின் 'வேழப்பத்து' தரும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

**( அல்லது )**

குறிஞ்சிப்பாட்டின் வழி அறியலாகும் தலைவனின் மாண்புகளைக் கட்டுரைக்க.

*********